දුරකථන
தொலைபேசி
Telephone
2698471
2698475
2698490

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
2693866

විද්‍යුත් තැපෑල
இணையத்தளம்;
E mail
postmaster@health.gov.lk

මගේ අංකය
எனது இல
My No.
NCD / Inj / 09 / 2021

ඔබේ අංකය
உமது இல
Your No. :

දිනය
திகதி
Date
7 .06.2021

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

பொது சுற்றறிக்கை : 01 – 15 / 2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண/பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகள்/மாகாண பொது வைத்தியசாலைகள்/மாவட்ட பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
தள வைத்தியசாலைகளின் மருத்துவ அத்தியட்சகர்கள்,
நிறுவனத் தலைவர்கள்,

## தேசிய விஷத் தடுப்பு வாரம் - 13 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2021 வரை
## "இலங்கையில் குழந்தைப்பருவ காலத்தில் நிகழும் விஷம்"

தேசிய விஷம் சார் மையம் சுகாதார அமைச்சுடன் இணைந்து கடந்த சில வருடங்களாக ஆண்டுதோறும் விஷ தடுப்பு வாரத்தை நடத்தி வருகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டம் பொதுமக்களுக்கும் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் விஷம் ஏற்படுவதைத் தடுத்தல், மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த முயற்சியானது காயங்களைத் தடுப்பதற்கான தேசிய கமிட்டி யினால் 2007 இல் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் தேசிய சுகாதார புள்ளிவிபரங்களின்படி, மருந்துகள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் காரணமாக விஷத்திற்குள்ளாகுதல் என்பது குழந்தைப்பருவ விஷத்தின் கீழ் கணிசமான உயர் சதவீத அதிர்வலைகளைக் காட்டுகின்றது. பதினாறு வயதின் கீழுள்ள வயதுப் பிரிவினரின் கீழ் விஷத்துக்குள்ளாகுபவர்களின் மொத்த எண்ணிக்கை 18,302 (22.75%) ஆகும். 2019 இல் தேசிய விஷம் சார் தகவல் மையத்தின் புள்ளிவிபரங்களின்படி, மொத்த விஷத்துக்குள்ளானவர்கள் சம்பந்தமான வெளிக்கொணர்வுகளில் 19 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் மத்தியில் குழந்தைப்பருவ விஷத்துக்குள்ளானவர்கள் **608(42.2%)** ஆக பதிவாகியுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, தேசிய தேசிய விஷம் சார் தகவல் மையம் குழந்தைப்பருவத்தில் விஷத்துக் குள்ளாவதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல் மற்றும் மரணித்தல் போன்ற சம்பவங்களை குறைக்கு முகமாக பின்வரும் தொனிப்பொருளில் இந்த வருடம் தேசிய விஷ தடுப்பு வாரத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த சுற்றறிக்கையின் நோக்கம் தேசிய விஷ தடுப்பு வார காலப்பகுதியில் சுகாதார நிறுவனங்களி னூடாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

தொனிப்பொருள் : "இலங்கையில் குழந்தைப்பருவ காலத்தில் நிகழும் விஷம்"
திட்டமிடப்பட்ட திகதிகள் : 2021 செப்ரெம்பர் 13 தொடக்கம் 19 வரை

நோக்கங்கள் :

1. குழந்தைப்பருவத்தில் விஷத்துக்குள்ளாவதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படு தல் மற்றும் மரணித்தல் போன்ற சம்பவங்களை குறைத்தல்
2. குழந்தைப்பருவத்தில் விஷத்துக்குள்ளாவதை குறைக்கும் முறைகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் :

நிறுவன மட்டத்தில் பணியாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வூட்டுவதற்கு செயல் ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல்

01. விரிவுரைகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துதல்

02. கையேடுகள் மற்றும் சுவரொட்டிகள் விநியோகித்தல்

உங்களுக்கு மேலதிக தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் தேவைப்படின் இந்த செயற்பாட்டினை ஒருங்கிணைக்கும் இலங்கை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அமைந்துள்ள தேசிய விஷம் சார் தகவல் மையத்தை 011 2686143 / 011 2691111 நீடிப்பு இலக்கம் 2430 எனும் தொலைபேசி இலக்கங்க ஹூடாக தொடர்பு கொள்ள முடியும்.

இந்த சுற்றறிக்கையினை அனைத்து ஊழியர்களதும் கவனத்திற்கு கொண்டுவருவதுடன் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். மேலும் விஷத் தடுப்பு வாரத்தில் ஒவ்வொரு சுகாதார நிறுவனத்தினாலும் ஆகக்குறைந்தது விஷத் தடுப்பு தொடர்பாக ஒரு நிகழ்ச்சித்திட்டமாவது நடத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
உங்களது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையினை பணிப்பாளர்/ தொற்றா நோய்கள் பிரிவு, சுகாதார அமைச்சு எனும் முகவரிக்கு 2021 நவெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வைத்தியர் எஸ். எச். முனசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

Dr. S. H. Munasinghe
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.